

அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் சிவ.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர, பேரூர்,ஊராட்சி, கிளைகழகம்,மற்றும் அனைத்து அணிகளின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கைப் பரப்பு துணை செயலளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரக்கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் விளையாட்டரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா பரிசுகளை வழங்கினார். பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகத் தலைவர் - முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீ,மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடன் இருந்தனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் - வயலோகம் அரசு மேல்நிலைப்பள்ளியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா : பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜூன் 26-

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வயலோகம் அரசு மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி 24.06.2023 அன்று துவக்கி வைத்து, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் மருந்துப் பெட்டகங்களை வழங்கி, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

இந்நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் தஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது. பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் இன்றைய தினம் 100 மருத்துவ முகாம்கள் நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி வயலோகம் அரசு மேல்நிலைப் பள்ளியில், இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம் துவக்கி வைக்கப் பட்டுள்ளது.

இம்முகாமில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியிலிருந்து சிறப்பு மருத்துவர்கள் மற்றும் முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தில் இணைந்துள்ள தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் சிறப்பு மருத்துவர்கள் இணைந்து பொது மக்களின் பல்வேறு விதமான உடல்நல மருத்துவ பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கிட உள்ளார்கள். அனைத்து விதமான ஆய்வக பரிசோதனைகளும் மேற்கொள்ளப் பட்டு, மருத்துவ சிகிச்சை மற்றும் உயர் சிகிச்சைக்கான பரிந்துரைகள் அனைவருக்கும் வழங்கப்பட உள்ளது.

அதன்படி, மருத்துவ வசதிகள் சென்றடையாத இடங்களில் வாழும் ஏழை, எளிய மக்களின் மருத்துவ தேவைகளை அவர்களின் வாழ்விடங்களுக்கு அருகிலேயே மருத்துவ முகாம்கள் நடத்தி நிறைவேற்றி வைப்பதாகும். பல்வேறு விதமான நோய்கள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு சிகிச்சைகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகள் நலன், பல்மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை இருதயநோய், நீரிழிவு நோய், புற்றுநோய், காசநோய், மகப்பேறு மருத்துவம் போன்ற பல்வேறு பிரிவுகளில் சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இம்மருத்துவ முகாம்கள் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

இந்த மருத்துவ முகாமில், கண்ணொளி காப்போம் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் வாயிலாகவும் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, தென்னலூர் பழனியப்பன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மருத்துவர் ராம்கணேஷ், ஒன்றிய குழுத் தலைவர் வி.ராமசாமி, கே.எஸ்.சந்திரன், ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து, ஊராட்சி மன்றத் தலைவர் செண்பகவள்ளி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

# திட்டக்குழு உறுப்பினர் தேர்தலில் தி.மு.கழகம் மாபெரும் வெற்றி!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - என்.கௌதமனிடம் வாழ்த்துப் பெற்றனர்!

நாகை, ஜூன் 26-

நாகை, மயிலாடுதுறை மாவட்டத்தை ஒருங்கிணைத்து திட்டக்குழு உறுப்பினர் தேர்தல் 23ம் தேதி நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. தேர்தலில் ஊரக பகுதிக்கான தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களான மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் மயிலாடுதுறை வடக்கு ஒன்றியச் செயலாளர் என்.இளையபெருமாள் மற்றும் தியாக விஜயேஸ்வரன், நபியாநர்கீஸ், விஜயபாரதி கென்னடி, வெண்ணிலாதென்னரசன், ஆர்.விஜயா, செல்விவீர மணி, கௌசல்யாஇளம்பரிதி, வீ.சோழன் ஆகிய 9 பேரும் வாக்கு எண்ணிக்கை முடிவில் வெற்றி பெற்றனர்.

ஏற்கனவே நகர பகுதிக்கான திட்டக்குழு தேர்தலில் தி.மு.க.வை சேர்ந்த நாகை நகர்மன்ற உறுப்பினர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, மயிலாடுதுறை நகர் மன்ற உறுப்பினர் சக்தி விஜய், கீழ்வேளூர் பேரூராட்சி உறுப்பினர் ம.ராசாத்தி ஆகியோர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பபட்டுள்ளனர். நாகை, மயிலாடுதுறை மாவட்டத்தை உள்ளடக்கிய 11 திட்டக்குழு உறுப்பினர் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 11 பேரும் திட்டக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

வெற்றி பெற்ற கழகத்தை சேர்ந்த திட்டக்குழு உறுப்பினர்கள் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப,கோவிந்தராசன், ஜு.என்.ரவி, மாவட்டக் கழக துணைச்செயலாளர் மு.ஞானவேலன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஶ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், மங்கை எம்.சங்கர், எம்.அப்துல்மாலிக், பழனியப்பன், தாமஸ் ஆல்வாஎடிசன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர பேரூர்க் கழகச் செயலாளர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் கருவாழக்கரை காளியம்மன் கோயில் தெருவில் பாலகுரு, விஜயகுமாரி ஆகியோரின் வீடு தீவிபத்தினால் எரிந்து சேதம் அடைந்தது. இதையடுத்து தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதிஉதவியை வழங்கினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஶ்ரீதர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# மறமடக்கியில் இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜூன் 26-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி அரசு மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 24.06.2023 அன்று துவக்கி வைத்து, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

இந்நிகழ்வு மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழகம் முழுவதும் 100 இடங்களில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மறமடக்கி மற்றும் வயலோகம் ஆகிய இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

இன்றைய சூழ்நிலையில் மனிதர்களுக்கு எத்தனை வயதிலும் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், சிறுநீரக நோய், மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்று நோய் உள்ளிட்ட பல்வேறு வியாதிகள் வந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் இத்தகைய மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் நோய் குறித்த அச்சங்கள் நீக்கப்படுகின்றன. முகாம்களில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், கண், காது மூக்கு தொண்டை, பல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம் மற்றும் மனநலம் மருத்துவம் உள்ளிட்ட சிறப்பு சிகிச்சைகளுக்கு பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு அவர்களுக்கு சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு உயர் சிகிச்சைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் விழாவானது மக்களுக்கு பயன்படும் வகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறையின் சார்பில், மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. நூற்றாண்டு கால தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 80 ஆண்டு காலம் சமுதாய வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஏழையின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மருத்துவத்துறையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம் போன்ற சிறப்பு வாய்ந்த திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மருத்துவத் துறையில் செயல்படுத்தப் பட்டுவரும் திட்டங்கள் அனைத்தையும் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு நல்வாழ்வு வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்

இந்நிகழ்வில், வருவாய் கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மருத்துவர் நமச்சிவாயம், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.முகமது இந்தியாஸ், வட்டாட்சியர் (ச.பா.தி.) பரணி, ஊராட்சி மன்றத் தலைவர் ராஜமனோகரி ரவி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ. இராசமாணிக்கம்
ஜூன் 26 (2016)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


### வெள்ளகோவில் ஒன்றியத்தில் ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்பாட்டுப்பணி!

# காங்கேயம் நகராட்சியில் பாரம்பரிய மாட்டுச்சந்தை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

திருப்பூர், ஜூன் 26-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் மாநகராட்சி 4 ம் மண்டலத் தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட வரட்டுக்கரை பகுதியில் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் ஓலப்பாளையம் முதல் மொட்டக்காடு வரையிலும், மேட்டுக்காட்டு வலசு முதல் வரட்டுக்கரை வரையிலும் ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணியினை துவக்கி வைத்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் காங்கேயம் நகராட்சி தாராபுரம் மெயின்ரோடு, கவி ரெஸ்டாரண்ட் அருகில் பாரம்பரிய மாட்டுச்சந்தையை திறந்து வைத்தார்.



நாகை, மயிலாடுதுறை மாவட்டத்தை ஒருங்கிணைத்து திட்டக்குழு உறுப்பினர் தேர்தல் ஊரக பகுதிக்கான 9 இடத்திற்கான தேர்தலில் தி.மு.க.வை சேர்ந்த 9 பேரும் வெற்றி பெற்றனர். இதையடுத்து வெற்றி பெற்றவர்கள் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்களை மாவட்ட வருவாய் அலுவலர் ஷகிலாவிடம் பெற்றனர். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமனிடம் வாழ்த்துப் பெற்றார்கள். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஶ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், என்.இளையபெருமாள், எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, மாவட்டக் கழக பிரதிநிதிகள் பரிதி.இளம்பரிதி, சி.வீரமணி மற்றும் பலர் உள்ளனர்.

அதனைத்தொடர்ந்து காங்கோயம் புதிதாக கட்டப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் காளைமாடு சிலை அமைப்பதற்கான இடத்தை அமைச்சர் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வி முருகேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன், கே.கே.சிவானந்தன், கருணை பிரகாஷ், சு.சந்திரசேகர், சிவ.செந்தில் குமார், எஸ்.ஆர்.எஸ்.செல்வம், சி.பிரபு, நகர கழகச் செயலாளர்கள் வசந்தம் நா.சேமலையப்பன், சபரி எஸ்.முருகானந்தம், முத்தூட் பேரூராட்சி செயலாளர் செண்பகம் பாலு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.கே.ரவிச்சந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் சுப்பு, பொதுக் குழு உறுப்பினர் கார்த்திகேயன், காங்கேயம் நகர மன்ற தலைவர் சூரியபிரகாஷ், நகராட்சி ஆணையாளர் வெங்கடேசன், உதவிப் பொறியாளர்கள் சசிக்குமார், கணேசமூர்த்தி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஷ்குமார் உள்பட ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.